சிறுவர்

# அமுதம்

19/10/1996

கிண்ணம்: 7

எண்ணம்: 10



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
—சுப்பிரமணியபாரதி

அன்புச் சிறுவர் சிறுமியரே!

விழாக்கள், கொண்டாட்டங்கள் என்று நாட்டுக் கவலைகளை மறந்து, சிலமணித்தியாலம் மகிழ்ச்சியுடன் இருக்கும் நிலை கூட மாறி விட்டது. விழாக்களில் குழப்பங்கள், தடியடி சண்டைகள், அவசரத்துக்குக் கூட மண்டபங்கள் கிடைக்காத நிலையை உருவாக்கி உள்ளது. இது வேதனைக்குரியது. அதை விடவும் வேதனைகளைத் தருகின்றது தற்போது அறிந்து கொண்ட இரட்டைக் கொலைகள். இவைகள் இந்நாட்டவரின் வெறுப்பை நாங்கள் சம்பாதித்துக் கொள்ள வழி வகுக்கும் என்பது மட்டுமல்ல, இவை நிறுத்தப்பட வேண்டும். இதற்குச் சிறுவர்கள் நீங்கள் நல்லவர்களாக வாழ வேண்டும்.

விருப்பு என்ற சொல்லுக்குப் வெறுப்பு என்னும் சொல் எதிரானது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்தது தான். வெறுப்பு என்பதன் அர்த்தமும் (கருத்து) உங்களால் உணரக் கொள்ளக் கூடியதுதான். நீங்கள் எல்லோராலும் விரும்பப்படும் பிள்ளையாக

இருக்க வேண்டும். மற்றவர்கள் உங்களை நல்லபிள்ளை என்று சொல்லும்போது உங்கள் மனம் மகிழும். உங்களைப் பெற்றவர்கள் மகிழ்வார்கள்.

விளக்கமாகச் சொல்வதானால் உங்கள் வீட்டுக்கு விருந்தினர் வருகிறார்கள். உங்களைப் போன்ற சிறுவர்களும் வருகிறார்கள். வீட்டில் நீங்கள் எனது அறை, எனது விளையாட்டுச் சாமான்கள், எனது கட்டில் என்று சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றீர்கள். வரும் உங்கள் வயதுக்காரர் உங்களோடு சேர்ந்து விளையாடுங்கள். உங்கள் படுக்கையில் சேர்ந்து தூயில் கொள்ளுங்கள். விளையாடும் போது சேர்ந்து விளையாடுங்கள். சண்டை போடாதீர்கள். அடித்தோ, கிள்ளியோ, அழ வைப்பதைக் காட்டிலும், அணைத்து ஒற்றுமையாக விளையாடுவது நல்லதல்லவா! நீங்கள் வேறு இடங்களுக்குப் போனாலும் அவ்வாறே நடந்து கொள்ளுங்கள்.

இதைவிட்டு அவரை எனக்குப் பிடிக்கவில்லை என்றோ, நான் அவரோடு சேர்ந்து விளையாட மாட்டேன் என்றோ, அவர் என்னோடு படுக்கக்கூடாது என்றோ, பிடிவாதம் செய்து வந்த விருந்தாளிகளின் மனத்தை நோகச் செய்யக் கூடாது. நீங்களும் நல்லவராகுங்கள். மற்றவர்களையும் நல்லவர்களாக்குங்கள்.

– ஆசிரியை –

# பூனைக்குட்டி

நான் வளர்க்கும் பூனைக்குட்டி
வெள்ளைக்குட்டியே!
அதை நன்கு விளையாட விட்டு
மணி கட்டியே!
தானும் என்னைப் போலே பந்தைத்
தட்டித் தட்டியே!
என்னைப் போல விளையாட வரும்
எட்டி எட்டியே!

பசி வந்தால் "மியாமியா" என்று
கத்துமே!
பசும் பாலை வைத்தால் கண்ணை
மூடிக்கொண்டு நக்குமே!
எலி கிட்ட வந்த போதும்
தொட்டிடாதே!
ஏனென்றால் அது சின்னக்
குட்டி தானே!



-ஜபாலன் ஆதவன்-
டென்மார்க்.

# பண்புள்ள சிறுமி



மாதவி வகுப்பிலேயே முதலாவதாக வருபவள். நல்ல புத்திசாலிப் பெண். அடக்கம், பணிவு, எல்லோரையும் மதிக்கும் திறமை எல்லாவற்றிலுமே முதலிடம்தான். முன்னேற்றம் என்ற சொல்லுக்கு வடிவமே அவள்தான் என்று ஆசிரியர் பெருமையாகக் கூறுவார்கள். வேறு பிள்ளைகளைப் ஆசிரியர்கள் பேசும்போது கூட மாதவியை உதாரணமாகக் கூறுவார்கள்.

அன்று எதிர்ச் சொல் பற்றி ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். முன்னேற்றம் என்ற சொல்லுக்கு "மாதவி வாழ்க்கையில் முன்னேறி வந்து கொண்டிருப்பவள்" என்ற வசனத்தைக் கூறிவிட்டு வகுப்பைப் பார்த்து முன்னேறி அதாவது முன்னேற்றம் என்ற் சொல்லுக்கு எதிர்ப்பதம் என்ன? என்று விளக்கம் கேட்டார். மாதவி கூட விடை தெரியாமல் விழித்தாள்.

திடீரென்று பின்னால் ஒரு குரல் "பின்னடைதல் அல்லது தாழ்ந்து விடுதல்" என்று கேட்டது. எல்லோர் கண்களும் அந்தப் பக்கம் திரும்பியது. அந்தப் பாடசாலைக்குப் புதிதாய் வந்த அமுதா தான் பதிலைக் கூறி இருந்தாள். ஆசிரியை அமுதாவைப் பாராட்டினார்.

அவள் படிப்பில் மாதவிக்குப் போட்டியாக இருந்தாள். படிப்பில் மட்டுமல்ல விளையாட்டு, மேடைப்பேச்சு எல்லாவற்றிலும் தான்.

பாடசாலையில் முன்னேற்றமான சிறுமி என்று பெயரையும் தட்டிக் கொண்டாள். மாதவி இரண்டாம் இடத்தையே பெற்றுக் கொண்டாள். ஆனாலும் மாதவியும் அமுதாவும் சினேகிதிகளாக இருந்தார்கள். ஒருநாள் வகுப்பில் கமலாவின் பேனாவைக் காணவில்லை. எல்லோருடைய மேசைகள், புத்தகப் பைகள் சோதனையிடப் பட்டன. தேடியபோது அமுதாவின் மேசையின் லாச்சிக்குள் கிடந்தது.

இவ்வளவு கெட்டிக்காரியான அமுதாவா! வகுப்புச் சிறுமியர் எல்லோரும் வியப்புடன் பார்த்தனர். பேனாவின் விஷயம் இப்படி.. சில நாட்களின் பின் பென்சில்........ . இப்படி நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் அமுதாவை வெறுப்போடு பார்க்கத் தொடங்கினார்கள். மாதவி அமுதாவுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினாள். "அமுதா, களவு செய்யத் தூண்டுவது கூட ஒரு நோயாமே, நீ ஒரு தடவை உன் பெற்றோரையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனை செய்து பார்" என்று சொன்னாள்.

அந்த முறை விளையாட்டு, படிப்பு எல்லாவற்றிலுமே அமுதா பின்தங்கி விட்டாள். பள்ளிக்கூட இறுதிநாள். வகுப்பில் சின்னக் கூட்டம் ஒன்றை ஆசிரியர் ஏற்பாடு செய்திருந்தார். விரும்பியவர்கள் தங்கள் கருத்துக்களைச்

சொல்லலாம் என ஆசிரியர் கூறியிருந்தார். அமுதா எழுந்து நின்றாள்.

மதிப்புக்குரிய ஆசிரியரே, அன்புத் தோழியரே,

நான் இந்த வகுப்புக்கு வந்த போது என்னை அன்புடன் வரவேற்றுக் கொண்டீர்கள். நான் களங்கப் பட்ட போது என்னை வெறுத்தீர்கள். ஒழுக்கத்துக்கும், பெருமைக்கும் பேர்பெற்ற இப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று மேன்மைப் பட எண்ணினேன். முடியவில்லை. என்னால் இந்த வகுப்போ, பள்ளிக்கூடமோ பழிக்கு ஆளாகக் கூடாது. ஆதலினால் நான் எனது படிப்பை வேறு பாடசாலையில் தொடர எண்ணியிருக்கின்றேன். உங்களிடம் இருந்து விடை பெற்றுக் கொள்கின்றேன்.

மாதவியும் வேறு சில தோழியரும் அமுதா தங்களை விட்டுப் பிரிவதை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டார்கள். மாதவி அமுதாவிடம் எங்கிருந்தாலும் கடிதம் போடும்படி கேட்டுக் கொண்டாள். அமுதாவும் விடை பெற்றுச் சென்று விட்டாள். விடுமுறை தொடங்கி விட்டது. மாதவி வீட்டில் தம்பியருடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பா மாதவிக்கு வந்த பாசல் ஒன்றைக் கொண்டு வந்து மாதவியிடம் கொடுத்தார்.

மாதவியும் தன்னுடைய அறைக்குச் சென்று பாசலைப் பிரித்தாள். அது அவளுடைய தொலைந்து போன டயரி. உள்ளே ஒரு கடிதமும் இருந்தது. அமுதா தான் அனுப்பி இருந்தாள். கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்.

" அன்புள்ள மாதவி,

நலம். நலமறிய ஆவல். இந்த டயரி பள்ளிக்கூடத்தில் நீச்சல் போட்டியின் போது எனக்குக் கிடைத்தது. செய்வது தவறு தானென்று தெரிந்தும், உனது டயரியைப் பிரித்து வாசித்து விட்டேன். அதற்காக என்னை மன்னித்து விடு. வாசித்ததில் எனக்குச் சில உண்மைகள் தெரிந்தன. தோழி, எதற்காக அப்படிச் செய்தாய்? வகுப்பில் காணாமல் போன பொருட்கள் எல்லாம் நீதானே என் மேசைக்குள் வைத்தாய். இந்த டயரியை ஆசிரியரிடம் கொடுத்தே நான் நல்லவள் என்பதை நிரூபித்து விட முடியும். அதை நான் செய்ய விரும்பவில்லை. நான் அக்காரியத்தைச் செய்தால் எனக்கும், உனக்கும் வித்தியாசம் இல்லை. இது காரணமாக நான் உன்னை வெறுக்கவில்லை. உன் தோழியாகவே இக் கடிதத்தை எழுதுகின்றேன். நடந்தவைகளை மறந்து விடுவோம்.

அன்புடன்

அமுதா.

மாதவி செயலற்று நின்று விட்டாள்.

-பாமினி அருள்வரதன்-

## பாசம் வென்றது

அகவை என்னும் நாட்டை அருள்மொழி என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு மாதவராயன் என்னும் மந்திரி இருந்தார்.

மாதவராயர் நல்ல அறிவாளி. நாட்டை நல்லமுறையில் ஆள்வதற்கு அரசனுக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். நாட்டு மக்களும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். அரசன் மந்திரியைத் தனது சகோதரனைப் போல அன்பு கொண்டு வாழ்ந்து வந்தார்.

மந்திரி நாட்டையும் அரசரையும் மிகவும் நேசித்தார். அயல்நாட்டின் அரசனான வரதவர்மனுக்கு இது பிடிக்கவில்லை. எப்படியாவது அகவைநாட்டைத் தன் கைக்குள் கொண்டு வர எண்ணினான். மந்திரியையும் தன் கைக்குள் போட்டுக் கொண்டான். அரசனைக் கொன்றுவிட்டுத் தான் எப்படியாவது அரசனாகி விடவேண்டும் என்று மந்திரி எண்ணம் கொண்டார். அதற்காக, அரசனைக் கொன்று



விடத் திட்டம் தீட்டினார்.

தன்னைச் சகோதரனாகவே பாவிக்கும் அரசனைக் கொல்ல மந்திரி வேதனை கொண்டாலும், பதவி ஆசை அவரை விடவில்லை. அதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்கான தருணமும் உடனேயே அவருக்குக் கிடைத்தது. அவரிடம் வந்த அரசர் "மாதவா, இன்று நல்ல பொழுதாக இருக்கிறது. இருவரும் வேட்டைக்குச் சென்று வருவோமா?" என்று கேட்டார்.

மந்திரிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இது நல்ல சந்தர்ப்பம். தனியாகச் சென்றால் அரசரைக் கொன்று விட்டுக் காட்டு மிருகங்கள் அடித்துக் கொன்று விட்டதாகச் சொல்லி விடலாம் என்று மனத்துள் நினைத்துக் கொண்டார். வேட்டைக்குப் புறப்பட்ட வேளையில், தங்களுக்குப் பின்னால் அரசனது மெய்ப்பாதுகாப்பாளர்களும் பின் தொடர்ந்து வருவதைக் கண்டார் மந்திரி.

"நாங்கள் இருவரும் மட்டுமே போவதாகக் கூறினீர்கள். பின்னால் வீரர்களும் வருகிறார்களே! என்று உள்ளத்தில் ஏமாற்றத்தைத் தேக்கி

வைத்துக் கொண்டு மந்திரி அரசரைக் கேட்டார். அதற்கு அரசர் "வேட்டையாடச் செல்லும் போது எனக்கோ, உமக்கோ, ஏதும் விபரீதம் ஏற்பட்டு விடக்கூடாது அல்லவா? நான் இறந்து விட்டால் இன்னொரு அரசன் வருவான். இந்த மந்திரி என் நாட்டிற்குக் கிடைப்பானா? அதனால்தான் மெய்ப்பாதுகாப்பாளர்கள் வருகிறார்கள்" என்று கூறிக் கொண்டு அன்புடன் மந்திரியைக் கட்டிக் கொண்டார்.

மந்திரிக்கு அரசரின் அன்பை நினைக்கும்போது, "இவரை எப்படிக் கொல்வது, மகாபாவமாயிற்றே! என்று நினைவு வந்தாலும், அடுத்த நிமிடமே மனத்தைக் கல்லாக்கிக் கொண்டார். காட்டில் வேட்டையாடிக் களைத்துப் போய் எல்லோருமே ஓய்வெடுத்துக் கொண்டனர். களைப்பில் எல்லோருமே தூக்கத்தில் ஆழ்ந்தனர். மந்திரிக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. எல்லோரும் தூக்கத்தில் இருக்கும் இந்த வேளையில், அரசனைத் தனிமைப் படுத்திவிட எண்ணினார்.

மெல்லிய குரலில் அரசரை அழைத்தார். "அரசே, புள்ளிமான் ஒன்று புதரில் மறைகிறது. எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! என்று அரசரைத்

தட்டி எழுப்பிக் கொண்டு, குதிரையில் ஏறிக் கொண்டார் மந்திரி. அரசரும் தன் குதிரையில் ஏறிக் கொண்டு மந்திரியைப் பின் தொடர்ந்தார். அரசரைத் தனிமைப் படுத்திக் கொண்டார் மந்திரி. ஆனாலும் தன் கையால் அரசரைக் கொல்வதற்கு மனம் வரவில்லை.

அப்போது அரசர் "மாதவா, மான் வேட்டை அவசரத்தில், தண்ணீர் கூட எடுத்து வரவில்லை. ஏதாவது பழமரங்கள்....... அதோ, மாமரம் நிறையப் பழத்தோடு" என்றவாறே அருகில் நின்ற மரத்தைப் பார்த்தார். அப்போது மந்திரி "எனக்கு மரத்தில் ஏறத் தெரியாதே" என்றார். "நான் நன்றாக மரத்தில் ஏறுவேனே" என்று சொல்லிக் கொண்டு, அரசர் "மளமளவென்று" மரத்தில் ஏறினார். அதேவேளை அவரைக் குறி பார்த்தவண்ணமே சிறுத்தை ஒன்று மரத்தில் மேலிருந்து "மெல்ல மெல்ல" இறங்கியது.

மந்திரியின் கண்கள் சிறுத்தையைக் கண்டன. "ஐயோ, அரசரைச் சிறுத்தை கொன்றுவிடப் போகின்றதே! என்று மனம் பதைத்தது. கைகள் தாமாகவே அம்பை எடுத்து வில்லில் பூட்டின. அடுத்த நிமிடத்தில் சிறுத்தை கீழே விழுந்து துடிதுடித்தது. அரசர் மரத்தில் இருந்து கீழே

இறங்கினார். மந்திரியைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"அரசரைக் கொல்லும் எண்ணத்துடன் அழைத்து வந்தேனே! என் பழி எண்ணத்தை, அரசர் மீது கொண்ட பாசம் வென்று விட்டதே! என் அரசரை இனி ஒருநாளும் கொல்ல நினைக்க மாட்டேன். அரசரையும் நாட்டையும் இரண்டு கண்களாகக் காத்துக் கொள்ளுவேன்" என்று மந்திரி மனத்தில் சபதம் எடுத்துக் கொண்டார். அரசரை இறுகத் தழுவிக் கொண்டார். அவரின் கண்களில் இருந்து பாசத்தின் மிகுதியால் கண்ணீர் பெருகியது.

---

ஈல்ஸ் (Eels) விலாங்கு மீன்களில் ஒருவகையாகும். பத்து மின்சார விளக்குகளை எரிக்கத் தேவையான மின்சாரம் இதன் உடலில் இருக்கின்றது. இந்த மீனைத் தொடும் எந்த உயிரினத்தையும் (மனிதன் உட்பட) உடனேயே கொல் ன்மை கொண்டது. இந்த விலா ்கள் 2.5 மீற்றர் நீளம் கொண்டவை. தன் மின்சார சக்தியால் சிறியமீன்களை அதிர்ச்சியடைய வைத்து உணவாக்கிக் கொள்ளுகின்றது.

---

# வினாவிடைப் போட்டி

1. உலகின் பிரபலமான பானமான "கோகோகோலா" வின் மூலப் பொருள் உற்பத்தி செய்யும் தென்னமெரிக்க நாடு இது. தெரிகின்றதா?
கொக்கு, பல்லக்கு, அம்பு, அபிமானம், யானைப்பாகன்.

2. மங்கோலியர்களால் "தெய்வத்தின் நாடு" என்று அழைக்கும் நாடு இது. தெரிகின்றதா?
இனிப்பு, சந்திரன், பக்தி, யாசகம்.


3. 1998ம் ஆண்டில் "கொமன்வெல்த்" விளையாட்டுப் போட்டிகள் நடக்கவிருக்கும் நாடு எது?
மங்கை, கிலேசம், பட்சி, ஆயாசம்.

4. உலகம் முழுவதிலும் உள்ள ஜேசுநாதரின் சிலை ஒரே மாதிரியானவை தான். அந்த உருவத் தோற்றத்தின் அமைப்புக்குச் சொந்தக்கார நாடு இது. தெரிகின்றதா?
டெனிஸ், அன்பு, அனுமானம், ஈர்ப்பு, பாக்கு.

5. மகாத்மா காந்தியை உங்களுக்குத் தெரியும். "அமெரிக்க காந்தி" என்று அழைக்கப்படும் இவரைத் தெரியுமா?
மாலை, கட்டிடம், ஆடி, பன்றி, பாலுட்டி, சதம், துவர்ப்பு, பாங்கி, சிங்கம்.

முடிவு திகதி: 16.12.96

# வாகனங்களின் கதை



தரை வழிப் பயணத்துக்கு, உதவி வரும் வாகனங்களின் கதையை அறிந்து கொண்டீர்கள். இனி தண்ணீர் வழிப் பயணங்களைச் சிறிது பார்ப்போம்.

மனிதன் பொதுவாக நிலத்தில் தான் வாழ்ந்து வருகிறான். ஆனாலும் கடல், ஆறு, ஏரி போன்றவற்றைக் கடக்கவும் நேருகின்றது. ஆழம் குறைந்த நீருள்ள இடங்களைக் கடந்து போய் விடலாம். சிறிய ஆறுகளை நீந்திக் கடக்கலாம். ஆழமுள்ள ஆறு, கடல் போன்றவற்றைக் கடக்கும் அவசியம் ஏற்பட்ட போது, அதற்கான சாதனங்கள் தேவைப்பட்டன.


இதற்காக மனிதன், மரக்குற்றிகளைப் பயன்படுத்தத் தொடங்கினான். பெரிய பெரிய மரக்கட்டைகளைத் தண்ணீரில் மிதக்க விட்டு, அவற்றில் ஏறி கடந்து கொள்ளப் பழகினான். மரக்கலங்கள் முன்னேறிச் செல்வதற்குத் தன் கைகளையே முதலில் பயன்படுத்தினான். பின்பு நீளமான கையால் பிடிக்கக் கூடிய மரத்துண்டங்களைப் பயன் படுத்தினான்.

இதில் அவன் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளானான். மரக்குற்றிகள் கனம் கொண்டதாக இருந்தபடியால், மரக்குற்றிகளின் கூடுதலான பகுதிகள் நீருக்குள்ளே அமிழ்ந்தன. தண்ணீரில் நனையாமல் பிரயாணம் செய்ய முடியவில்லை. எல்லா நீர்நிலைகளிலும் மனிதனால் மரக்குற்றிகளின் மூலம் கடந்து செல்வது முடியாமல் இருந்தது.

-தொடரும்-

# இரட்டையர்

செர்க்கி என்ற கிராமத்தில் ஒருவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. வித்தியாசமே தெரியாமல் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையின் கைகளில் மச்சம் (அடையாளம்) புள்ளியாகக் காணப்பட்டது. பிறந்த குழந்தைகளில்



ஒன்றுக்கு எய்பா என்றும், மச்சமுள்ள குழந்தைக்கு சைபா என்றும் பெற்றோர்கள் பெயரிட்டார்கள்.

அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தது அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஆச்சரியமாகவும், பயமாகவும் இருந்தது. அந்த ஊரில் அதுவரை இரட்டைக் குழந்தைகள் பிறக்கவில்லை. இதனால் அவர்களின் தலைவன் குழந்தைகளைக் கொன்று விடுமாறு உத்தரவு போட்டான். பெற்றவர்கள் இருவருமே திகைத்தனர். மன்றாட்டமாக தம் குழந்தைகளை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்டனர். தலைவனும் கிராமத்தவர்களும் விட்டுக் கொடுக்க மறுத்தனர். இரட்டைக் குழந்தைகளால் தமது இனத்திற்குக் கேடு விளையும் என்று கூறினார்கள்.

அன்று இரவு வந்தது. பெற்றவர்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் சென்றார்கள். அங்கேயே குழந்தைகளை வளர்க்கத் தொடங்கினார்கள். எய்பாவும் சைபாவும் தாய் தந்தையுடனேயே வளர்ந்து பெரியவர்களானார்கள். பெற்றவர்கள் அவர்களுக்குத் தங்களின் குல

வழக்கப்படி கல்வி புகட்டினார்கள். போர்ப் பயிற்சிகள் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களும் இளைஞர்களாக வளர்ந்தனர்.

ஒரு நாள் சகோதரர்கள் இருவரும் உணவுக்காக, மான் வேட்டைக்குச் சென்றனர். வேட்டையாடிக் கொண்டு வரும்போது வழியில் கிராமத்துச் சிறுவர் சிலர் இரத்தக் காயத்துடன் அழுது கொண்டு நிற்பதைக் கண்டு விசாரித்தார்கள். அவர்கள் கிராமத்தை வேறொரு இனத்தவர்கள் அழிக்கின்றார்கள் என்றும், சனங்களைக் கொல்லுகின்றார்கள் என்றும் அச்சிறுவர்கள் மூலம் அறிந்து கொண்டனர்.

அவர்களை அழைத்துச் சென்று தங்கள் பெற்றோரிடம் ஒப்படைத்து விட்டு, பெற்றோரின் அனுமதியுடன் கிராமத்துக்குச் சென்று போரிட்டுத் தங்களின் கிராமத்தை மீட்டனர். கிராமத்தவர் அவர்களுக்கு நன்றி கூறினார்கள். திரும்பவும் தங்களுடனேயே வந்து இருக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவர்களும் அதற்குப்பின் கிராமத்தில் வாழத் தொடங்கினார்கள். அது மட்டுமல்லாமல் அன்று முதல் அக்கிராமத்தில் இரட்டைக் குழந்தைகள் பிறப்பது அதிஷ்டம் என்ற நம்பிக்கை வளரலாயிற்று.

-ஆபிரிக்கக் கதைகள்-

# மகாபாரதம்



காசி தேசத்து அரசகுமாரிகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட விசித்திரவீரியன் நாட்டைத் தமயனாரான வீஷ்மரின் ஒத்துழைப்புடன் நல்லமுறையில் பரிபாலித்து வந்தான். ஆனாலும் விசித்திரவீரியனும் பலகாலம் இருக்கவில்லை. சில வருடங்களுள் நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டான். நகரத்து மக்களும், அரண்மனையில் உள்ளவர்களும் சோகத்தில் ஆழ்ந்தார்கள்.

நாட்டை ஆள்வதற்கு வாரிசு இல்லை. சிற்றன்னையாகிய சத்தியவதி வீஷ்மனை அரியணையேறும்படி வற்புறுத்திய போதும், தந்தைக்காகத் தான் எடுத்துக் கொண்ட சபதத்தை விட்டுவிட வீஷ்மர் மறுத்து விட்டார். இதனால் கவலை

கொண்ட சத்தியவதி வியாசமுனிவரை வரவழைத்து ஆலோசனை கேட்டாள். வியாசமுனிவரின் அருளால் அரசிகளான அம்பிகை, அம்பாலிகை இருவரும் கர்ப்பவதியானார்கள். இந்த வேளையில் அவர்களின் தாதி ஒருத்தியும் கர்ப்பவதியானாள்.

உரிய காலத்தில் மூவருக்கும் ஆண்குழந்தைகள் பிறந்தன. அமபிகையின் மகனுக்குத் திருதராஷ்டினன் என்று பெயரிட்டனர். அம்பாலிகையின் மகனுக்குப் பாண்டு என்று பெயரிட்டனர். தாதியின் மகன் விதுரன் எனப் பெயர் கொண்டான். மூவரையும் தன் மக்களைப் போல வீஷ்மர் வளர்த்து வந்தார். இதனால் வீஷ்மரைப் பிதாமகர் என்றும் அழைத்தார்கள். குழந்தைகள் வளர்ந்து வந்து கொண்டிருந்தார்கள்.

மூவருக்கும் வில், வாள் பயிற்சிகளை வீஷ்மர் கற்றுக் கொடுத்தார். வேதங்களைக் கற்றுத் தேர்ந்தார்கள். சிறந்த வீரர்களாக மூவரும் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்தனர். ஆனாலும் திருதராஷ்டிரன் பிறவியிலேயே கண்பார்வையில்லாத குருடனாக இருந்தான். இது எல்லோருக்கும் கவலையாக இருந்தது. வாலிபர்களுள் மூத்தவனான திருதராஷ்டிரன் அஸ்த்தினாபுரத்தை ஆளுவதற்காக முடி சூட்டப்பட்டான். பாண்டு சேனைத் தலைவனாகவும், விதுரன் அமைச்சனாகவும் பதவி ஏற்றனர். திருதராஷ்டிரன் முடி சூட்டிக் கொண்ட போதும் கண் தெரியாத காரணத்தால், பாண்டுவே ஆட்சி புரிய உதவி வந்தான்.

-தொடரும்-

வினாவிடைப்போட்டி முடிவு:

1. உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசு எது?
பாலம், பாற்கிண்ணம், பஸ்பம், அன்னதானம், சின்னம். (பாகிஸ்தான்)

2. உலகின் முதல் பெண்பொலீஸ்காரரைத் தந்த நாடு எது?
அரிசி, மென்மை, அரியது, பாக்கு, திடகாத்திரம். (அமெரிக்கா)

3. 'ஏரியானா' என்பது ஒரு நாட்டின் பழைய பெயர். அந்த நாடு எது?
ஆடு, வெப்பம், கானம், இனிமை, சரஸ்வதி, தாலாட்டு, கவிஞன். (ஆப்கானிஸ்தான்)

4. பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு எது?
நிதானம், யூலியஸீசர், தளர்ச்சி, சல்லாபம், பந்தயம், தூதுவன். (நியூசிலாந்து)

5. தென்அமெரிக்க நாடுகளில் பரப்பளவில் பெரியது எது?
பிணைப்பு, அரேபியா, அலட்சியம், இல்லம். (பிரேசில்)

எழுதியவர்கள்:

1. கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
2. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Münster
3. தர்சன் சரவணபவன் Solingen
4. முகுந்தன் மகேந்திரன் Berg.gladbach
5. கௌரிசங்கர் சரவணபவன் Solingen
6. மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
7. ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
8. ஜதீபன் சிவராஜா Grovenbroich
9. சோபிகா சிவராஜா Grovenbroich
10. துன்ஷா ஸ்ரீதரன் Arnsberg
11. கண்ணன் ஜெயானந்தன் Berg.gladbach
12. பிரகாஸ் கந்தவனம் Norway
13. மஞ்சுளா சிவசம்பு Lohmar
14. வித்தியா சிவசுப்பிரமணியம். Selm

● பரிசுக்குரியவர்: துன்ஷா ஸ்ரீதரன்

கங்கை நீர் சிறந்தது. அதனிலும் உயர்ந்தது அபிஷேக நீர். அதனிலும் உயர்ந்தது கும்பாபிஷேக நீர். அதனிலும் உயர்ந்தது ஏழைகளுக்காக உழைக்கும் ஒரு உத்தமனின் முகத்தில் துளிர்க்கும் வேர்வை.

–கிருபானந்த வாரியார்–

தோள்களின் மேல் தேசத்தையே
தூக்கிப் பிடியுங்கள்.



தம்பியரே, தங்கையரே,
அருகில் வாருங்கள் – முன்னோர்
தந்து சென்ற நீதி நெறியை
நினைவு கூருங்கள்!
நம்பிக்கையைப் படிகளாக்கித்
தினமும் ஏறுங்கள் – விண்ணும்
நாளை உங்கள் பாதங்களில்
பணியும் பாருங்கள்!

வெம்பிப் பிஞ்சில் பழுத்திடாமல்
விளைந்து கனியுங்கள் – பண்பு
வீரத்தோடு மானத்தையும்

விரும்பி அணியுங்கள்!
சிம்மம் போலச் சீறிப் பாயும்
சினத்தைத் தணியுங்கள்—செய்யும்
செயல் அனைத்தும் சிந்தித்தாய்ந்து
செய்யத் துணியுங்கள்!

பொம்மை போலத் தலையை ஆட்டும்
போக்கை ஒழியுங்கள்—நன்கு
புரியும்வரை திரும்பத் திரும்பக்
கேட்டுத் தெளியுங்கள்!
கொம்புத் தேனின் ஈக்கள் போலக்
கூடி உழையுங்கள்—உங்கள்
கூட்டில் கல்லை எறிபவர்க்கும்
தேனைப் பொழியுங்கள்!

வம்பு, வாது, சூதில்லாமல்
வாழ முனையுங்கள்!—மண்ணின்
வாசத்தோடு நேசத்தையும்
வாரி வழங்குங்கள்!
தும்பைப் பூவைப் போல நெஞ்சத்
தூய்மை அடையுங்கள்—குன்றுத்
தோள்களின் மேல் தேசத்தையே
தூக்கிப் பிடியுங்கள்!

—தளவை. இளங்குமரன்—

## எனக்கு உதவும்



மோகன் தாத்தாவைப் பார்த்தான். அவனுக்குப் பாவமாக இருந்தது. அப்பா அவரைக் கவனிப்பதில்லை. அம்மா தாத்தாவுக்குச் சோறு கொடுப்பதில்லை. தாத்தாவுக்குப் பற்கள் இல்லை. மெதுமையான உணவு வேண்டும். அன்போடு அவரைக் கவனிக்க வேண்டும் என்று அடுத்த வீட்டு மாமா சொன்னார். ஆனால் தாத்தாவின் பக்கத்தில் இருந்த தட்டும், தண்ணீர் குடிக்கும் பாத்திரமும் அழுக்காக இருந்தது.

அவர் இருக்கும் இடம் கூட அழுக்காக இருந்தது. ஆனால் வீட்டுக்குள் எத்தனை

விதமான அழகான தட்டுக்கள், பாத்திரங்கள். அம்மாவோ, அப்பாவோ அதில் ஒன்றைக் கூட தாத்தாவுக்குக் கொடுத்ததில்லை. ஒருநாள் தாத்தாவின் பாத்திரத்தையும், சாப்பிடும் தட்டையும் மோகன் எடுத்து ஒளித்து வைத்து விட்டான்.

அம்மா தாத்தா அதைத் தொலைத்து விட்டார் என்று பேசினாள். அப்பாவோ தாத்தாவை அடிப்பதற்காகக் கை ஓங்கினார். அப்போது மோகன் தாத்தாவின் தட்டையும் பாத்திரத்தையும் எடுத்துக் கொடுத்தான். "அதை ஏன் எடுத்து ஒளித்து வைத்தாய்?" என்று அப்பா மோகனிடம் கேட்டார். அதற்கு மோகன் அப்பாவிடம், "அப்பா உங்களுக்கு வயதாகும் போது அந்தப் பாத்திரங்கள் எனக்கு உதவுமல்லவா! அதற்காகத்தான் ஒளித்து வைத்தேன்." என்றான்.

அப்பாவும் அம்மாவும் தங்கள் செய்ததை எண்ணி வெட்கப் பட்டனர். அன்று முதல் தாத்தாவை நன்றாகக் கவனித்துக் கொண்டனர்.

# தொழில்



கண்ணன் அந்தப் பெரிய வீட்டைத் துப்பரவு செய்து கொண்டிருந்தான். அந்த வீட்டின் சொந்தக்காரர், வீட்டை வாடகைக்கு விட்டிருந்தார். வரும் வாடகைக்காரரிடம் துப்பரவு செய்ததற்காக கூலிப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படியும் கூறிவிட்டுச் சென்று விட்டார். வாடகைக்காக வீட்டை எடுத்தவர் வந்தார். கண்ணனிடம் பத்து ரூபாயைக் கொடுத்தார். கண்ணன் கூடுதலான பணம் தரும்படி வேண்டிக் கொண்டான். அவர் மறுத்தார். கண்ணன் பிடிவாதமாக நின்றான். அவர் பத்துரூபாவை கண்ணனது கைக்குள் திணித்தார்.

கைக்குள் இருந்த பத்துரூபாய் பணத்தை அவருக்கு முன்னாலேயே வீசி எறிந்து விட்டுப் வீட்டுக்குத் திரும்பி விட்டான். அடுத்த நாள் பள்ளிக்கூடம் போகும் போதாவது நல்ல உடுப்புப் போட்டுக் கொண்டு போக வேண்டும் என்பதற்காகத்தானே இவ்வளவு கஷ்டப்பட்டுத் வேறு ஆளையும் சேர்க்காமல் தனியாளாக கூலிக்கு வீட்டைத் துப்பரவு செய்தான்.

இருபது ரூபாயாவது தருவார் என்று எதிர்பார்த்தால் வெறும் பத்து ரூபாய். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்தான். பள்ளிக்கூடத்துக்காவது நேரத்துக்குப் போக வேண்டும். முதல்நாள் போட்ட சட்டையையே எடுத்துப் போட்டுக் கொண்டு, சாப்பாட்டைப் பற்றிக் கூட நினைக்காமல் பள்ளிக்கூடம் சென்றான். இவனது வகுப்புக்குப் புது ஆசிரியர் மாற்றலாகி வருவதாக, வகுப்பு ஆசிரியர் கூறி இருந்தார். எப்படி இருப்பாரோ! என்ற பயத்துடன் வகுப்பில் நுழையவும் வகுப்புக்கள் தொடங்குவதற்கான மணி அடிக்கவும் நேரம் சரியாக இருந்தது.

சிறிது நேரத்தில் வகுப்பு ஆசிரியருடன் வகுப்புக்குள் நுழைந்தவரைக் கண்ட கண்ணனுக்கு மயக்கமே வந்து விடும் போல இருந்தது. வந்தவர் வேறு யாருமில்லை. வாடகை வீட்டுக்காரர் தான். புது ஆசிரியர் இவர்தான் என்று பழைய ஆசிரியர் (வகுப்பு ஆசிரியர்) புது ஆசிரியரை அறிமுகப் படுத்தினார். கண்ணன் தனக்கு முன்னால் உள்ள மாணவனின் பின் ஒளிந்து கொண்டான். ஒளிந்திருந்தாலும், புது ஆசிரியர் அவனைக் கண்டு கொண்டார். அவனைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

கண்ணன் இனிப் படிப்பதேயில்லை என எண்ணிக் கொண்டான். காலையில்தானே அவரை எடுத்தெறிந்து பேசி விட்டான். அவர் தன்னைச் சும்மா விட்டு

விடுவாரா! சின்னப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் பெரிது படுத்தி வேதனைப் படுத்துவாரே!. இன்றைக்குத் தப்பி விட்டேன். நாளைக்கும் அவ்வாறு நடக்குமா? என்று பலவிதமாகச் சிந்தித்தான். பள்ளிக்கூடம் விட்டதும் அவன் புது ஆசிரியரைப் பார்க்காமல், கூப்பிட்ட நண்பர்களையும் பாராமல் விரைவாகத் தெருவில் இறங்கி நடந்தான்.

"கண்ணா! கண்ணா! என்றழைப்பது கேட்டுத் திரும்பினான். புது ஆசிரியர் தாமு தான் சைக்கிளில் வந்தவர், கூப்பிட்டார். அப்படியே ஓடி விட எண்ணினான். கால்கள் மறுத்து விட்டன. அருகில் வந்த ஆசிரியர் அவனிடம் முப்பது ரூபாயைக் கொடுத்தார். கண்ணா, உன்னைப் பற்றி ஆசிரியர் நன்றாகப் புகழ்கின்றாரே!. என் வகுப்புக்கு நீ கிடைத்தது அதிஷ்டம் தான்." என்றார். காலையில் தான் நடந்து கொண்டதற்காக ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டான் கண்ணன். ஆசிரியர் சிரித்துக் கொண்டார்.

பின்பு அவனிடம் "எல்லாவிதமான வசதிகளோடு வாழும் பிள்ளைகள் கல்வி கற்பது வேறு. உன்னைப் போல மற்றவர்களிடம் கையேந்தாமல், தொழில் செய்து கொண்டு கல்வியிலும் சிறப்பாக இருப்பது வேறு. நீ எனது பெருமைக்குரிய மாணவன்" என்று அவன் தோளில் தட்டிக் கொடுத்தார். கண்ணனுக்குப் பெருமை பிடிபடவில்லை.

## சில நொடிகள்

1. நீள வாலுடன், அங்கும் இங்கும் ஓட, வால் குறையும். துணிகள் இணையும்.

2. மூடிய குகைக்குள்ளே செம்பவழ முத்துக்கள்.

3. மண்ணாலே வந்தது. கையாலே செய்தது. தீயாலே வெந்தது, வீட்டையே தந்தது.

4. நாளெல்லாம் நடந்தாலும் நாற்பது அடி செல்லாது.

5. உயரத்தில் உள்ள ராஜா, ஊர் முழுதுக்கும் ராஜா,
உயிரை வளர்க்கும் ராஜா, உடல் எல்லாம் தொடும் ராஜா.

1. ஊசியும் நூலும் 2. மாதுளம்பழம் 3. செங்கல் 4.
4. நத்தை 5. சூரியன்

## சார்லி சப்ளின்

சார்லியின் படங்கள் வெற்றி வாகை சூடி வலம் வந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் மிகப் பிரபலமாகி இருந்து கொண்டிருந்த நடிகர்களின் படங்கள் விற்பனைக் குறைவால் வீழ்ச்சியுறத் தொடங்கின. "சோல்டர் ஆம்ஸ்" (soldier arms) என்ற படம் தயாரிக்கப்பட்டிருந்த வேளை, சாமுவேல் கோல்டுவின் (Samuel Goldwyn) என்பவர் சார்லியை விருந்தொன்றிற்கு அழைத்திருந்தார்.

பிரபலமான பல நடிகர், நடிகைகள் சீமாட்டிகள் எல்லோரும் விருந்துக்கு வந்திருந்தனர். அங்கு ஒரு இளம்நடிகை சார்லிக்கு அறிமுகமானார். "மில்ட்ரெட் ஹரிஸ்" என்ற பெயருள்ள அந்த இளம் நடிகை மிகவும் அழகாக இருந்தார் என்பது பொதுவானது. யாரையுமே கவர்ந்து தன்னிடம் இழுத்துக் கொண்டிருந்தார். அவ்வளவு அழகு அந்தப் பெண்ணிடம் இருந்தது. தொழிலை மட்டுமே பெரிதாக நினைத்து வாழ்ந்த சார்லி அந்த நடிகையின் மீது காதல் கொண்டார்.

அந்தப் பெண்ணின் சம்மதத்தோடு 1918இல் சார்லி திருமணம் செய்து கொண்டார். திருமணம் முடித்த அன்றே ஹாலிவூட்டில் அழகிய வீட்டை வாங்கிக் கொண்டார். (M.G.M) எம்.ஜி.எம் நிறுவனத்தினர் மில்ட்ரெட்டை தங்கள் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தனர். இது சார்லிக்குப் பிடிக்கவில்லை. ஆனால்

தடுக்கவில்லை. ஒப்பந்த விஷயத்தைச் சார்லி சீர்படுத்தித் தர வேண்டுமென்று மில்ட்ரெட் விரும்பியபோது சார்லி மறுத்து விட்டார்.

இப்படித் தொடங்கிய வாழ்வில் படிப்படியாக விரிசல் காணத் தொடங்கியது. இருவருமே சந்தித்துக் கொள்வதே அபூர்வமாக இருந்தது. இச்சமயத்தில், நண்பரான டக்லஸ் சார்லிக்கு மில்ட்ரெட்டின் நடத்தை பற்றி நல்ல முறையில் பேசப்படவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார். இதனால் சார்லியின் மனம் புண்பட்டது. நேரடியாகவே கணவன் மனைவிக்கிடையில் சிறுசிறு சண்டைகள் ஏற்படத் தொடங்கின.

ஒருநாள் மனைவியைச் சந்தித்த வேளை, சார்லி நேரிடையாகவே "நீயும் நானும் இப்படியே எவ்வளவு காலத்துக்கு வாழ்வது? விவாகரத்து நம்மிருவருக்கும் நல்லது." என்றார். அதற்காக எந்தவித கவலையுமின்றி மில்ட்ரெட் ஒத்துக் கொண்டார். விவாகரத்துப் பணமாக நீ எவ்வளவு தொகை எதிர்பார்க்கிறாயோ, அதை நான் தந்து விடுகிறேன்." என்றார் சார்லி.

1920இல் சார்லி நூறாயிரம் டொலர் பணத்தை மில்ட்ரெட்டுக்குக் கொடுத்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டார். சார்லியின் திருமண வாழ்க்கை மிகக் குறுகிய காலத்திலேயே பிளவு பட்டு விட்டது.


–தொடரும்.–



# அன்னப் பறவை

அன்னம் பறவையைப் பற்றிப் பல கதைகள் பலநாடுகளிலும் பேசப்பட்டு வருகின்றன. நம் நாட்டுக்கதைகளில் அன்னத்தின் அழகைப் பற்றிப் பலவிதமாகக் கூறுவார்கள். அழகிய பெண்களை அன்னப்பறவைப் போல என்றும், நடையை அன்னநடை என்றெல்லாம் பெண்களின் நடையைப் புலவர்கள் வர்ணிப்பார்கள். அன்னத்தைத் தேவலோகத்துப் பறவையாகச் சொல்வார்கள். பாலையும் நீரையும் கலந்து வைத்தால் அன்னம் நீரை நீக்கித் தண்ணீரைக் குடிக்குமாம்.

கிரேக்க, எகிப்து போன்ற பிற நாடுகளில் கூட, அன்னம் ஒரு அதிசயப் பறவையாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. தேவதைகள் பூமிக்கு வரும்போது அன்னப்பறவை உருவில் வருவதாகக் கிரேக்கக் கதைகள் கூறுகின்றன. எகிப்துக் கதைகள் குழப்பத்தை விளைவிக்கும் தேவதையாக அன்னத்தை வர்ணித்தார்கள். அன்னத்தின் முட்டையில் இருந்தே சூரியன் தோன்றியதாகவும் கதை இருக்கின்றது.



கிரேக்கக் கதைகளில் ரோமான் (Toman)என்னும் பெண்தேவதை தன் இறகுகளை ஒவ்வொரு இளவேனில் காலத்திலும் உதிர்த்துக் கொள்வாளாம். இறகுகள் பூமியில் வாத்துக்களாக உருமாறினவாம். பிரித்தானியர்கள் அன்னப்பறவையை அரசபறவையாகக் கருதுகிறார்கள். அன்னம் யாவரையுமே கவரும் அழகான பறவையாக இருந்திருக்க வேண்டும். இப்படித்தான் இறந்தகாலத்தில் கூற வேண்டியிருக்கிறது.

ஏனெனில், பழைய கதைகளில் பேசப்பட்ட அன்னத்தை யாரும் கண்டதில்லை. வெறுமே கற்பனைகளில் வந்த அன்னமாகவே அதைத் தள்ளி வைக்கவும் முடியவில்லை. ஏனெனில் அன்னப்பறவையின் இனத்தைச் சேர்ந்த பறவைகளாகவே வாத்து, வான்கோழி, போன்றவற்றைக் கருதுகிறார்கள். அன்னப்பறவைகள் என்று குறிப்பிடப்படும் இனம் இங்கிலாந்தில் காணப்படுகின்றன. ஆனாலும் மற்றய ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுகின்றன. கறுப்பு நிற அன்னங்கள் நியூசிலாந்தில் காணப்படுகின்றன.

பிரித்தானியர் அன்னப்பறவைகளை அரசபறவையாகக் கருதுகிறார்கள். பல நூற்றாண்டுகளாக அரச அந்தஸ்தையும், பாதுகாப்பையும், அன்னங்கள் பெற்றிருக்கின்றன. தேம்ஸ் நதிக்கரையில் வாழும் அன்னப்பறவைகளைத் தவிர, மற்றைய மாநிலங்களில் வாழும் பறவைகள் அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்றன.

அன்னத்தின் வாரிசாகக் கருதப்படும் வான்கோழி, வாத்து இவற்றின் எலும்புகள் எதிர்பாராமல் எவருக்குக் கிடைக்கிறதோ அவர்கள் நினைப்பது நடக்கும் என்பது ஒரு நம்பிக்கை. வாத்தின் இறைச்சியையும், எலும்பையும் சோதித்துப் பருவநிலைகளைக் கூறுபவர்களும் இருக்கிறார்கள். காலங்களைக் கணித்துக் கூறும் சோதிடர்களும் இருக்கிறார்கள். ஜூலியஸீசர் தனது எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்களில் வாத்துக்களை யாரும் கொல்லக்கூடாது என்று கட்டளை பிறப்பித்திருந்தார்.

ஆனாலும், ஐரோப்பியர்களின் பண்டிகைகளில் வாத்து இறைச்சி விருந்து தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.


# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | |
|---|---|---|
| மே கீ | மச்சம் | புல் |
| | சம்பு | புலை |
| சாவி | கால் | காவலன் |
| சாவித்திரி | நடை | பள்ளி |
| திரி | பதி | பச்சை |
| சடை | ராசி | வரம் |
| பணை | வித்தை | செவி |
| பசை | பிடி | செவிடன் |
| தம் | மலை | |
| வெள்ளம் | புல் | வ இ |
| வியப்பு | சுதி | |
| புனல் | | விதி |
| மறவன் | இ வ | யாதி |
| சரி | | பசு |
| சரிதை | வித்தியா | பரதம் |
| பல் | வித்தியாசம் | திணை |
| பல்லவி | சம்மதி | தடை |
| விஞ்ஞானம் | மதி | விரி |
| ஞானம் | பட்டி | புலி |
| | பட்டியல் | செம்பு |
| கீ மே | தட்சணை | தனி |
| | விடியல் | |
| பரி | சாட்டை | மா |
| பரிதி | புதை | தை |
| சாதம் | புதையல் | சா |
| தம் | நம்மை | மை |

எழுதியவர்கள்:

| | |
|---|---|
| 1.வித்தியா சுப்பிரமணியம் | Selm |
| 2.றுஷாணி நிமலகுமார் | Schweiz |
| 3.சிவகரன் .V | Danmark |
| 4.கௌரியன் சிவானந்தராஜா | Elsdorf |
| 5.லக்சன் சிவானந்தராஜா | Elsdorf |
| 6.மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| 7.பிரகாஸ் கந்தவனம் | Norway |
| 8.விஜிதா | Danmark |
| 9.ஜெயானந்தன் கண்ணன் | Berg.Gladbach |
| 10.சோபிகா சிவராஜா | Grovenbroich |
| 11.ஜதீபன் சிவராஜா | Grovenbroich |
| 12.ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 14.மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 15.கௌரிசங்கர் சரவணபவன் | Solingen |
| 16.முகுந்தன் மகேந்திரன் | Berg.gladbach |
| 17.தர்சன் சரவணபன் | Solingen |
| 18ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| 19.கிரிசாந் மனோரஞ்சிதராஜா | Münster |

பரிசுக்குரியவர்: கௌரிசங்கர் சரவணபவன்




NEKTAR FÜR KINDER